மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும்
சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

"தித்வா" அனர்த்த நிலைமையினால் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை வழமைக்குக் கொண்டுவருவதற்காக மேலதிக பணியாளர் தொகுதியினரைப் பெற்றுக்கொள்ளல்.

''தித்வா" அனர்த்த நிலைமையினால் சேதத்திற்குள்ளான மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான வீதிகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் பொருட்டு பின்வரும் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொறியியலாளர் (சிவில்) - 03 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MM 1-1 சம்பளக் குறியீட்டின் IIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 81,710.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 99,510.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்.

- **தகைமைகள் (பின்வரும் தகைமை 1 அல்லது 2)**

  1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

     அத்துடன்

     பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறித்த விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

  2. பதவிக்கு இயையான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

     (விண்ணப்பதாரர் இலங்கை பொறியியல் சபையில் இணைந்த சிவில் பொறியியலாளராக பதிவைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்)

- **வயது:**

  22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

அளவுக் கணிப்பீட்டாளர் - 03 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MM 1-1 சம்பளக் குறியீட்டின் IIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 81,710.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 99,510.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்.

- **தகைமைகள் (பின்வரும் தகைமை 1 அல்லது 2)**

  1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அளவுக் கணிப்பீட்டியலில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

     அத்துடன்

     பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறித்த விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

  2. பதவிக்கு இயையான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

நில அளவையாளர் 01 பதவி

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MM 1-1 சம்பளக் குறியீட்டின் IIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 81,710.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 99,510.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்.

- **தகைமைகள் (பின்வரும் தகைமை 1 அல்லது 2)**

  1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நில அளவையியலில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

     அத்துடன்

     பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறித்த விடயத்துணையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

  2. பதவிக்கு இயையான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) - 12 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  JM 1-1 சம்பளக் குறியீட்டின் IIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 65,633.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 83,433.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்..

- **தகைமைகள்**
  (பின்வரும் தகைமை 1 அல்லது 2 அல்லது 3)

  1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 7) ஏழாம் நிலைக்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

  2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 6) ஆறாம் நிலைக்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

     அத்துடன்

     தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், தனியார்துறை நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

  3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 5) ஐந்தாம் நிலைக்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

     அத்துடன்

     தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், தனியார்துறை நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

தொழில்நுட்ப உதவியாளர் - 20 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MA 2-1 சம்பளக் குறியீட்டின் IIIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 46,960.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 64,760.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்..

- **தகைமைகள்**

  ஒவ்வொரு பதவிக்குமான கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 5) ஐந்தாம் நிலைக்குக் குறையாத நிலையில் NCT (சிவில்) அல்லது NCIT (சிவில்) விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

திட்டமிடுநர் - 02 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MA 2-1 சம்பளக் குறியீட்டின் IIIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 46,960.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 64,760.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்.

- **தகைமைகள்**

  ஒவ்வொரு பதவிக்குமான கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 5) ஐந்தாம் நிலைக்குக் குறையாத நிலையில் NCED (தேசிய சான்றிதழ் பொறியியல் திட்டமிடுநர்) தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

வேலை நிர்வாகி - 30 பதவிகள்

- **மாதாந்தக் கொடுப்பனவு:**

  MA 1-1 சம்பளக் குறியீட்டின் IIIஆம் தரத்தில் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயையான வகையில் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 43,312.00 ரூபா மற்றும் 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபாவாகும் வகையில் மாதாந்தம் 61,112.00 ரூபா கொடுப்பனவு உரித்தாகும்..

- **தகைமைகள்**

  (அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

  i. சிங்களம் / தமிழ்

  ii. ஆங்கிலம்

  போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

  மற்றும்

  (ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

  (இ) நிர்மாணம் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ 4) நான்காம் நிலைக்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

- **வயது:**

  18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

பொது நிபந்தனைகள்:

1. இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
4. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு இயைபான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளில் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
5. அரச அல்லது நியதிகள் சட்டச்சபை கடமையாற்றுபவராயின் நிறுவனத்தின் தலைவரினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் தமது சுய தரவை உள்ளடக்கிய விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், தாம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
7. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல் பொய்யானவை அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பிற்கு முன் தெரியவந்தால் தகுதியற்றவனாக கவனத்திற் கொண்டு உங்களது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் தெரியவந்தால் அதற்குரித்தான செயற்பாடுகளின் கீழ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. குறித்த துறையில் உள்ள சேவை அனுபவத்திற்கு நேர்முகப் பரீட்சையின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

சேர்த்துக் கொள்ளப்படும் முறை

- **சகல பதவிகளுக்காகவும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்.**

இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆனால் அவ்வாறு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இந்த பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என ஏற்றுக்கொண்டதாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதார்கள் சுய விபரங்களை உள்ளடக்கி தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் (சான்றுபடுத்தப்பட்ட) சகிதம் அவற்றை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2026-05-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
மத்திய மாகாணம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
இல. 09, எஹெலேபொல குமாரிஹாமி மாவத்தை,
போகம்பர
கண்டி.
தொலைபேசி இல. 081-2204378